***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 34/2017 |
| | : | Prosecution P.W - 3 |
| NAME | : | நவீன் ராஜா |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 05.08.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது சின்னநாடானுரில் குடியிருந்து வருகிறேன். நான் பிஇ முடித்து விட்டு விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகள் ஷியாம்டேனியல்ராஜ், பாரத், தீபன் ஆகியோர்களை தெரியும். எதிரிகள் அனைவரும் எங்கள் ஊர்க்காரர்கள். அசா1 குணசேகரன் என் அப்பா, அசா.2 பத்ரகாளி என் அம்மா. 28.05.2015 ல் எங்கள் வீட்டு பக்கத்தில் இரவு 6.30 முதல் 7.30 மணிக்குள் நான் வீட்டில் இருந்தேன் என் அப்பாவை அடித்து போட்டதும் என் அப்பா சத்தம் கேட்டு ஓடி வந்து பார்த்தேன். அங்கு யாரும் இல்லை, அனைவரும் அடித்து போட்டு ஓடி விட்டார்கள். பின் என் சித்தப்பா பாலகிருஷ்ணன் இருசக்கர வாகனத்தில் என் அப்பாவை தென்காசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். என் அப்பாவை சந்திரன், ஆஜர் எதிரிகள், ஷியாம் டேனியல், பாரத், தீபன் ஆகியோர்அடித்ததாக கேள்விபட்டேன். என் அப்பாவை ஒரு பையன் அரிவாளால் மண்டையில் வெட்டி உள்ளான். சந்திரன் கம்பை வைத்து அப்பாவின் வலது புறம்

தோளில் அடித்ததாகவும் இன்னொருவர் செங்கலை கொண்டு என் அப்பாவின் இடதுபுற நெஞ்சில் அடித்ததாகவும் என் அம்மா சொன்னார். என் அப்பா நினைவு இல்லாமல் கீழே படுத்திருந்தார். நான் மருத்துவமனையில் வைத்து என் அப்பா சொல்ல சொல்ல புாகரை எழுதினேன். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாணை செய்ய போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 34/2017 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | பத்ரகாளி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 05.08.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது சின்னநாடானுரில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகள் ஷியாம்டேனியல்ராஜ், பாரத், தீபன் ஆகியோர்களை தெரியும். எதிரிகள் அனைவரும் எங்கள் வீட்டுக்கு பக்கத்தில் இருப்பவர்கள். அசா.1 குண சேகரன் என் கணவர். 28.05.2015 ல் மாலை 6.45 முதல் 7.30 மணிக்குள் எங்கள் வீட்டின் அருகில் எதிரிகள் அனைவரும் வீட்டு தெரு குழாய் தண்ணீர் இழுப்பதில் எதிரிகள் பிரச்சினை செய்தார்கள். எதிரிகள் அனைவரும் என் கணவரை தேவுடியா மகனே, செறிக்கி மகனே என கெட்ட வார்த்தைகளால் பேசினார். எதிரி டேனியல் ராஜ் என் கணவரை அரிவாளை கொண்டு இடது தலையில் வெட்டினார். எதிரி சந்திரன் என் கணவரை கம்பை வைத்து இடது தோள்பட்டையில் அடித்தார். எதிரி செல்வன் செங்கலை வைத்து எனது கணவரின் வலது பக்க நெஞ்சில் அடித்தார். எதிரி பார்த்திபன் மற்றும் தீபன் செங்கல்லை வைத்து எனது கணவரின் கண்ணில் அடித்தார்கள். என்

கணவர் மயங்கி கீழே விழுந்தார். பின்னர் என் கொழுந்தன் பாலகிருஷ்ணன் சத்தம் கேட்டு வந்து என் கணவரை மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றார். பின்னர் நானும், என் மகன் நவீன் ராஜா பின்னால் மருத்துவமனைக்கு சென்றோம். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாணை செய்ய போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 34/2017 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | **குணசேகரன்** |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 05.08.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது சின்னநாடானூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகள் ஷியாம்டேனியல்ராஜ், பாரத், தீபன் ஆகியோர்களை தெரியும். எதிரிகள் அனைவரும் எங்கள் ஊர்க்காரர்கள். 2015 ம் வருடம் 5 ம் மாதம் எதிரிகளுக்கும், எனக்கும் பஞ்சாயத்து தண்ணீர் தெருவில் நள்ளி போடுவதில் பிரச்சினை ஏற்பட்டது. 28.05.2015 ல் மாலை 6.45 முதல் 7.30 மணிக்குள் நான் என்னுடைய வீட்டின் வாசல் முன்பு நின்று கொண்டிருந்த போது எதிரிகள் அனைவரும் ஓடி வந்து தேவுடியா மகனே, செறிக்கி மகனே உன்னை வெட்டி கொன்றுவிடுவேன் என்று சத்தம் போட்டு கொண்டு ஓடி வந்தார்கள். எதிரி சந்திரன் கம்பை கொண்டு எனது இடது பக்க தோள்பட்டையில் அடித்தார். எதிரி செல்வன் செங்கல்லை எடுத்து வலது பக்க மார்பில் அடித்தார். எதிரி டேனியல்ராஜ் அருவாளை கொண்டு தலையின் இடது பக்கம் வெட்டினார். எதிரி தீபன் என்னை தோள்பட்டையில் மிதித்து கீழே தள்ளி விட்டார். எதிரி பரத் ஓடி வந்து

என்னை மிதித்தார். எதிரிகள் அனைவரும் சேர்ந்து என்னை மிதித்தார்கள். எனக்கு மயக்கம் வந்துவிட்டது. எனது மனைவி பத்ரகாளி, மகன் நவீன் ராஜ் சத்தம் கேட்டு வந்து சத்தம் போடவும் எனது சித்தப்பா மகன் பாலகிருஷ்ணன் வந்து அவரது இருசக்கர வாகனத்தில் வந்து என்னை தென்காசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்.

நான் தென்காசி அரசு மருத்துவமனையில் இருந்த போது போலிஸார் அங்கு வந்தார்கள் நான் சொல்ல சொல்ல என் மகன் நவீன் ராஜா புகார் எழுதினார். அந்த புகார் மனுவில் நான் கையெழுத்து செய்து அங்கு வந்த போலிஸாரிடம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அந்த புகார் மனு நான் கொடுத்தது தான். நான் தென்காசி அரசு மருத்துவமனையில் 11 நாள்கள் சிகிச்சையில் இருந்தேன். மேற்படி புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாணை செய்ய போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi